# சுவாமி விபுலானந்தர் ஓர் தத்துவவியலாளர்
# (Swami Vipulanandar is a Philosopher)

கலாநிதி க. கணேசராஜா, காரைதீவு

தத்துவம், சமயம் மற்றும் கலாசாரம் பற்றிய வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமேயானால் ஒரு உண்மை விளங்கும். மிகப் பழமையான, 5000 ஆண்டுகட்கு முன்னதான சிந்துசமவெளி நாகரீகம், எகிப்திய நாகரீகம், பாலஸ்தீன நாகரீகம், மொசபடோமிய நாகரீகம், மற்றும் சீன நாகரீகம், போன்ற நாகரீகங்கள் மிகச் சிறப்பாக விளங்கியவையாகும். அக்காலத்தில் தத்துவம், சமயங்கள், கலாசாரம் என்று பிரித்துக்காணவியலாதபடி அவை இரண்டறக் கலந்திருந்தன. அன்று மனிதன் தன் சமூகத்தோடும், இயற்கையோடும் இயைந்த ஒரு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான். தனி மனிதனுக்கும், சமூகத்திற்கும் இடையில் பெரிய இடைவெளிகள் ஏதும் அக்காலத்தில் இல்லை. இயற்கையே மனிதன் வணங்கிய பெருந்தெய்வமாக இருந்தது. கடவுளர் எல்லாம் இயற்கையோடும், பிரபஞ்சத்தோடும் ஒப்பிடப்பட்டு அடையாளம் காணப்பட்டனர்.

பழங்காலத்தில் எகிப்தியர் கடவுளை நிலைத்த தன்மை உடையவராகக் கருதினர். பாபிலோனியர் வாழ்வை இயங்கியல் நோக்குடன் கண்டனர். எகிப்தியர் இறப்பை தனிமனிதனின் முடிவாகக் காணவில்லை. இறப்பிற்கும் பிறகு ஒரு வாழ்க்கை இருப்பதாக நம்பினர். பாபிலோனியர் இறப்புக்குப் பின் மறுவாழ்வு இல்லை என நினைத்தனர். உலக வாழ்வையே அவர்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

கிரேக்க வரலாற்றில் - கிறிஸ்துவுக்கு முன் 7ம் நூற்றாண்டில் மாயஜால சமயங்கள் பல தெய்வ வழிபாடுகளை கொண்டிருந்தன. கிரேக்க சமயம் புராண நிலையில் இருந்து பின்னர் தத்துவப் புனரமைப்பு பெற்ற ஒன்றாகும். பொதுவாகக் கூறுவோமேயானால் பண்டைச் சமயத்தில் உணர்ச்சி பூர்வமான சிந்தனை ஒன்றிணைந்திருந்தது. கடவுளும், மனிதர் வாழும் உலகும் வெவ்வேறாக இல்லை.

இந்தியச் சமய வரலாற்றில், சிந்து சமவெளி நாகரீகத்தில் சமூக, பொருளாதார மேம்பாட்டில் சமயம் பெரும்பங்கு வகித்ததைக் காண்கிறோம்.

வேதகாலம் கடவுள் நம்பிக்கை உடையதாக விளங்கியது. வைதீகச் சடங்குகளை உபநிடதங்கள் ஆதரிக்கவில்லை. பிரம்மம், ஆத்மா, மாயை போன்ற தத்துவங்கள் இக்காலத்தே தோன்றின. இந்தியச்சமய வரலாற்றில் இதிகாச காலம் முக்கியமானது. இராமாயணமும், மகாபாரதமும் இந்தியப்பண்பாட்டில் ஆரம்ப காலத்தின் நடைமுறையில் இருந்த மரபுகள், தத்துவம் சிந்தனை மற்றும் அறவாழ்வு பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. பகவத்கீதை பக்தி, ஞானம், கர்மம் போன்ற மார்க்கங்களைக் காட்டியது. சமயம் என்ற நிலையிலிருந்து மாறுபட்டு கடவுள் பற்றிய கருத்தியல் ஏதுமின்றித் தோன்றிய ஒரு தத்துவச் சிந்தனையே பௌத்தம் ஆகும். அதற்கும் மேலாக, ஒரு நடுநிலை மார்க்கமாக விளங்கியது. மகாவீரர்(கி.மு 599 - 527) சமண சமயத்தை போதித்தார். இருவருமே வேதச்சடங்கு முறைகள் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டனர். இருவருமே முனிவர்களாக மாற்றம் கொண்ட அரசிளங்குமாரர்கள். வேதங்களில் வேள்வி முறை மற்றும் சடங்கு ஆசாரங்களையும், முக்திக்கு அவை வழி என்பதனையும் முற்றிலும் மறுத்தனர். அவர்கள் தமது சமய முறைகளை தர்க்க ரீதியிலும், அனுபவ முறையிலும் அமைத்தனர்.

ஒவ்வொரு ஆன்மாவும் அதனதன் இயல்புகளைக் கொண்டது எனச் சமணம் கூறுகின்றது. இதுபோல பல ஆன்மாக்கள் உள்ளன. சமண சமயம் கடுமையான தவம் மற்றும் விரத முறைகளை உலகியல் துன்பங்களிலிருந்து விடுபடுவதற்கான வழி என்று வலியுறுத்தப்படுகிறது. சமணர்களுக்கு உலகியலிருந்து விடுபடுதல் என்பது ஆத்மாவைத் தூய்மைபடுத்தி மீண்டும் பெறுதலும், இறப்பற்ற தன்மையை அடைதலுமேயாகும்.

புத்த சமயம் எல்லாம் மாற்றத்திற்கு உரியது என்று கூறுகின்றது. இது சூனியவாதம் (Nihilism) எனப்படுகின்றது. புத்தர் கடுமையான முறைகளை மறுத்தார். அத்தோடு உலகியலிலிருந்து விடுபடுவதற்கு சரியான அறிவு வேண்டும் என வலியுறுத்தினார். இவ்விரு சமய மறுப்பு கருத்துக்கள் இந்தியக் கலாசாரத்தில் அதிகம் பங்கு பெற்றுள்ளவையாகும்.

இவ்விரு சமயங்கள் நீங்கலாக ஏனைய இந்தியத் தத்துவங்கள் யாவும் வேதங்களைத் தங்களுக்குரிய மிக உயர்ந்த அடிப்படை நூல்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய இந்திய சிந்தனையை விசாரணை செய்யும் போது பல புதுமையான கருத்துக்கள் வந்துள்ளதனை நாம் அவதானிக்கலாம்.

தத்துவமென்பது ஆங்கிலத்தில் Philosophy எனப்படுகிறது. இது Philo, Sophia என்ற இரு கிரேக்க சொற்களில் இருந்து தோன்றியதாகும். அதாவது Philo என்பது விருப்பு (Love) என்றும், Sophia என்பது ஞானம் (Wisdom) என்றும் கூறப்படுகிறது. இதனைத் தமிழில் ஞானத்தை விரும்புதல் அல்லது நேசித்தல் எனலாம். (Love of Wisdom)

தத்துவ ஆய்வு ஏனையவற்றிலிருந்து வேறுபட்டது. தரவுகள், சூத்திரங்கள், ஆய்வுக்கருவிகள் என்பன தேவைப்படுவது வேறுதுறைகளிலாகும். ஆனால் தத்துவத்துறையில் எது முன்தேவை என்றால் விசாரணை செய்யும் மனமாகும். "விசாரணை" என்ற பதம் தான் தத்துவத்தை வேறு துறைகளிலிருந்து வேறுபடுத்தும் பதமாகும். அத்தோடு தத்துவம் பாடப்பரப்பற்ற, பக்கச்சார்பற்ற நியாயத்தையும் உண்மையையும் மட்டும் தருகின்றது. இதனை "அறிவு அறிவுக்காக" என்று எல்லை வகுக்கலாம். இது யாதெனில் வேறு எதற்கும் வாராத நிலைமையே அறிவு, அறிவுக்காக என்று வரையறுக்கிறது. இதன் வெளிப்பாடு அல்லது இலக்கு உண்மையை புரிவதிலுள்ள தெளிவான அர்ப்பணமாகும். இங்கு உண்மையென்பது ஒன்றின் அல்லது ஒரு தோற்றப்பாட்டின் யதார்த்தத்தை கூறும் இயல்புள்ளது எனலாம்.

இத்தகைய தத்துவ ஆய்வானது மேலைநாட்டிலும் கீழைநாட்டிலும் இடம்பெற்றிருப்பதை நாம் பொதுவாக அறியலாம். மேலை நாட்டினரை விட கீழைநாட்டு சிந்தனையாளர்கள் தத்துவ விசாரணையை பௌதீக உலகோடு மட்டும் மட்டுப்படுத்தவில்லை. அவர்கள் பௌதீக அதீத உலகோடும் தொடர்புபடுத்தியுள்ளனர். இந்த கீழைத்தேய தத்துவ சிந்தனை பண்பாடு மரபில்தான் சுவாமி விபுலானந்தரை நாம் பார்க்கலாம். சுவாமி விபுலாநந்தர் இலங்கையிலுள்ள அம்பாரை மாவட்டத்தில் காரைதீவு எனும் பழம் பெரும் ஊரில் பிறந்தார். இவர் பிறந்த இடம், சூழல், வளர்ப்பு இவருக்கு உண்மை பற்றிய ஞானத்தை (Wisdom) தேட வாய்ப்பு இருந்தது. அறிவும் ஞானமும் தத்துவத்தின் அடிப்படைகள்.

சுவாமி விபுலானந்தர் கீழைத்தேய சிந்தனை மரபில் மிகவும் வியத்தகு பற்றுடையவராவார். ஏனெனில் இவரது சிந்தனைகள் ஒரு துறையில் மட்டுமன்றி பல்வேறுபட்ட துறைகளில் தமது ஆழமான புலமையினை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது சிறுவயதில் இருந்தே கணிதம், விஞ்ஞானம், சமயம், தமிழ் இலக்கிய, இலக்கணங்கள், வரலாறு, தத்துவம் முதலியவற்றைக் கற்பதில் ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டியுள்ளார். பிற்பட்ட காலங்களில் அவர் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவுகள், அவர் எழுதியுள்ள நூல்கள், கவிதைகள், நூற்றுக் கணக்காண கட்டுரைகள், குறிப்பாக நிலவும் பொழிலும், நாடும் நகரும், மலையும் கடலும், கவியும் சால்பும், ஐயமும் அழகும், வண்ணமும் வடிவும், விஞ்ஞான தீபம், சூரிய சந்திரோற்பத்தி, வங்கியம், பொருணூற்சிறப்பு, உலகபுராணம், எண்ணளவை, லகரவெழுத்து, மதுரை இயற்றமிழ் மகாநாட்டுத் தலைவர் பேருரை, திருக்குறள் முதலதிகாரமும் திருச்சிவபுரத்துத் திருப்பதிகமும், இமயன் சேர்ந்த காக்கை, உள்ளங் கவர் கள்வன், உணவு, கரந்தை தமிழ் சங்கத்தின் 22 ஆம் விழாவின் அறிமுக உரை, கங்கையில் எழுதியிடப்பட்ட ஓலை, நிலவும் பொழிலும், சங்கீத பாரிஜாதம், சங்கீத மகரந்தம், இசைக்கிரமம், பண்ணும் திறனும், எண்ணும் இசையும், எண்ணும் எழுத்தும், சுருதி வீணை குழலும் யாழும், நீர மகளீர் இன்னிசைப்பாடல், இயல் இசை நாடகம், பாலைத்திரிபு போன்ற கட்டுரைகளில் செய்துள்ள விசாரணையை நோக்கும் போது இவர் ஒரு தத்துவ ஞானியாக அடையாளப்படுத்த முடியும்.

கிரேக்க சிந்தனையாளரான பிளேட்டோ தத்துவஞானி யார் என்ற வினாவுக்கு விளக்கம் தருகின்றார். இவர் தனது குடியரசு (Republic) நூலில் ஆறாம் அத்தியாயத்தில் 270ம் பக்கம் பின்வருமாறு வரைவிலக் கணப்படுத்துகின்றார்.

தத்துவஞானியின் தன்மைகளுள் ஒன்று அறிவு வேட்கையாகும். அவ்வேட்கை நிலைத்த உண்மையையும் மாறாத, அழியாத உண்மையை விளக்குவதாகும், மெய்ஞானியின் மனம் அவனறிந்து பொய்மையை ஏற்காது. பொய் அவனது வெறுப்புக்கான பொருள். அவன் உண்மையையே நேசிப்பான், உண்மையான தத்துவஞானியாக இருப்பவனின் விருப்பங்கள் அனைத்தும் அறிவின்பால் ஈர்க்கப்படும். ஆன்மாவின் இன்பங்களில் திளைக்க, உடல் சம்பந்தமான இன்பங்கள் அவரைப் பாதிக்காது, தத்துவஞானி உண்மையாக தன்னடக்கம் உடையவனாகவும், பேராசைக்கு புறம்பானவனாகவும் இருப்பான்.

உண்மையான தத்துவஞானிக்கு கருமித்தனத்துடன் கூடிய இரகசிய எண்ணம் இராது. மேலும் தைரியம், பரந்த நோக்கம், புரிந்துகொள்ளும் திறன், நல்நினைவுத் திறன், மற்றவர்களுக்கு உபயோகப்படுபவர், நல்லவர் போன்ற பண்புகளை பிளேட்டோ தத்துவஞானிக்காக சுட்டிக்காட்டுகின்றார். இந்தப்பண்புகள் சுவாமி அவர்களுக்கும் காணப்பட்டதை அவதானிக்கலாம்.

மேலும் யாரும் தத்துவம் பேசலாம் ஆனால் ஜேர்மனிய விமர்சன மெய்யியலாளரான இமானுவல் காண்ட் என்பவரைத் தவிர்த்து தத்துவம் பேச முடியாது. என்று கூறுவது போன்று கீழைத்தேய மரபில் இயல், இசை, நாடகம் பற்றி யாரும் பேசலாம். ஆனால் சுவாமி அவர்களைத் தவிர்த்து பேச முடியாது என்றவாறு சிறப்புப் பெற்றார். இதற்கு எடுத்துக் காட்டாக யாழ்நூலில் உள்ள ஏழு இயல்களில் உள்ள விடயங்களை அடிப்படையாகக் கூறலாம். பாயிரவியல், யாழுறுப்பியல், இசைநரம்பியல், பாலைத்திரிபியல், பண்ணியல், தேவாரவியல், ஒழிபியல் போன்றவற்றை இங்கு நான் அடையாளப்படுத்த விரும்புகிறேன்.

ஒரு தத்துவவாதி கருத்தியல் சார்ந்தவராகவோ அல்லது சடவாதியாகவோ இருக்கலாம். ஆனால் சுவாமி அவர்கள் ஒரு கருத்தியல் சார்ந்த தத்துவவியலாளராகவே (Ideal Philosopher) காணப்பட்டார். இதற்கு எடுத்துக் காட்டாக அவரது "வெள்ளை நிற மல்லிகையோ..." என்ற பாடலில் வரும் "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்ற வரிகளை எடுத்து நோக்கும் போது பௌதீகதீதக் கருத்துக்களாகவே (Metaphysical Statements) கொள்ளமுடியும். ஏனெனில் உத்தமனார் என்று சுவாமி கூறியது எமக்கு மேலே ஒரு சக்தி உள்ளது என்றும், அது எல்லாம் கடந்தது என்றும், அதனை அடைய எமக்கு முக்கியமாக தேவைப்படுவது உள்ளம் அல்லது மனம் தூய்மையாக இருக்கவேண்டும் என்பதாகும். இச் சிந்தனைகள் சுவாமியை ஒரு கருத்துவாதியாகவும், ஆத்மீக வாதியாகவும், பௌதீக வாதியாகவும் (Spiritualist) அடையாளப்படுத்த முடிகின்றது. இது மேலைத்தேய சிந்தனையில் ஜேர்மனிய கருத்தியல் வாதியான G.Hegal என்ற தத்துவ வாதியோடு ஒப்பிடக்கூடியதாகவுள்ளது. அதாவது G.Hegal சுட்டிக்காட்டுகின்ற போது கருத்தியல் சார்ந்த முழுமைவாதக் கருத்துக்கள் (Absolute Idealism) சுவாமியின் சிந்தனைகளோடு தொடர்புபடுவதனை நாம் அவதானிக்கலாம். அத்தோடு சுவாமியினது கல்வி தொடர்பான கோட்பாடுகளை நோக்கும் போது மேற்கத்தேய அறிவியலைக் கீழைத்தேய கலைஞானத்துடன் சேர்த்து உள, உடற்பயிற்சி அடிப்படையிற் புதியதொரு கல்வி அமைப்பை எம்மிடையே பரப்ப வேண்டும் என்பதே இவரது கல்விக் கொள்கையாக இருந்தது இது பிளேட்டோவின் கல்விக் கொள்கையோடு பெரிதும் தொடர்புபடுவதை அவதானிக்கலாம். அறியமுடிகின்றது.

எனவே சுருக்கமாக பார்க்கும் போது சுவாமி விபுலாநந்தரின் சிந்தனைகளின் ஆழமும், தெளிவும் இவரை ஒரு சிறந்த தத்துவ வாதியாக பரிணமிக்க செய்துள்ளது. அவரது விஞ்ஞான அறிவு, சமயப்பற்று, இலக்கிய உணர்வு, இரசனையியல் விபரிப்பு, பௌதீகதீத நம்பிக்கை, கடமை உணர்வு அவரை என்றும் மறவாத கடந்த சமகால தத்துவவாதியாக அடையாளப்படுத்தலாம்.

**அடிக்குறிப்புகள்**


01. இராமானுச்சாரி., ஆர், **பிளேட்டோவின் குடியரசு,** சாகித்தியஅக்கடமி, நியூடெல்லி, 1967, ப.276

02. அரங்கராஜன்., ஜெ, **சுவாமி விபுலாநந்தரின் பேச்சும் எழுத்தும்,** தோழமை வெளியீடு: சென்னை, 2009, ப.3

03. மாக்கிரட் பென்றின்., **சுவாமி விபுலாநந்தர் நினைவுப்பேருரை,** கிழக்குப்பல்கலைக்கழகவெளியீடு: இலங்கை, 2005, ப.2

04. ஞானகுமாரன்., நா, **மெய்யியல்,** செல்வம் வெளியீடு:யாழ்ப்பாணம், 2003, ப.2

05. சற்குணம்., எம், **அடிகளார் படிவமலர்,** சுதந்திரன் அச்சக வெளியீடு, கொழும்பு, 1969, ப.90

06. நூற்றாண்டு நினைவுக் கட்டுரைத் தொகுப்பு **தமிழறிஞர் விபுலாநந்தர் வாழ்வும் பணிகளும்,** இந்துசமயகலாசார வெளியீடு, கொழும்பு, 1992, ப.26

07. அருணாசலம்., க, **சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள்,** மில்லாத்வெளியீடு, சென்னை, 1990, ப.3

08. Bernstein Richard, **Outline of Indian Philosophy,** Berlin, 1907, P.2

09. Chatterjee., S, **The Problems of Philosophy**, Das Gupta & Co., LTD, Calcutta, 1949, P. 2